**மருதம் அகாடமி Youtube channel**

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

# 11th தமிழ்

## மனப்பாடப் பகுதி

### யுகத்தின் பாடல் - சு.வில்வரத்தினம்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைக ளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

### நன்னூல் - பாயிரம்

- பவணந்தி முனிவர்

**பாயிரம் இல்லது பனுவல் அன்றே**

4. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே நூ. எண்: 47

5. காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே. நூ. எண்: 48

பா வகை: நூற்பா

### காவியம் - பிரமிள்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

### குறுந்தொகை - வெள்ளிவீதியார்

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

பா வகை: நேரிசை ஆசிரியப்பா

### புறநானூறு

-கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே . (182)

### திருக்குறள்

**அடக்கமுடைமை**

1. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.
2. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
3. தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (வேற்றுமை அணி)

**ஒப்புரவறிதல்**

1.தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

மருதம் அகாடமி Youtube channel
தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789
Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

2.மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

பெருந்தகை யான்கண் படின் (உவமை அணி)

### புகழ்

1. தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று

2. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய

வாழ்வாரே வாழா தவர்

### நிலையாமை

1. *நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்*

*பெருமை உடைத்துஇவ் வுலகு.*

### துறவு

1. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்

அதனின் அதனின் இலன்

2. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு. சொல் பின்வரும் நிலையணி

### வலியறிதல்

1. வினைவலியும் தன்வ லியும் மாற்றா ன் வலியும்

துணை வலியும் தூக்கிச் செயல்

2. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை

வியந்தான் விரைந்து கெடும்

3. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல

இல்லாகித் தோன்றாக் கெடும்

### காலமறிதல்

1. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்

கருதி இடத்தால் செயின்.

## திருக்குறள்

### குறிப்பறிதல்

1.குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்

யாது கொடுத்தும் கொளல்

### பகைத்திறம் தெளிதல்

1. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க

சொல்லேர் உழவர் பகை

2. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்

கைகொல்லும் காழ்த்த இடத்து. பிறிதுமொழிதல் அணி

### மருந்து

1. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்

2. நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்

சொற்பொருள் பின்வரும் நிலையணி

### இரவச்சம்

1. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து

கெடுக உலகியற்றி யான்.

## புரட்சிக்கவி -பாரதிதாசன்

சிற்றூரும் வரப்பெ டுத்த வயலும் ஆறு

தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி

நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்

நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?

கற்பிளந்து மலை பிளந்து கனிகள் வெ ட்டிக்

கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை ?

பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்

போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

பா வகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

# தொலைந்து போனவர்கள்

- அப்துல் ரகுமான்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை - வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

பா வகை : சிந்து

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

www.Padasalai.Net